2013 ஏப்ரல் 2]

பகுதிக்கு பேருந்து வசதி என்பதே சுத்தமாக இல்லாமல் இருக்கிறது. எனவே, என்னுடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே பேருந்து விடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான, சரியான பேருந்து வசதிகளை இயக்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 6,000 புதிய பேருந்துகளை வழங்கி, அதில் 2,885 பேருந்துகளை மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடியசைத்து இயக்கி வைத்து இன்று மக்களின் பயன்பாட்டிற்காக, பயணிகளின் வசதிக்காக அவை சென்று கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய பேருந்துகளுக்கான கூண்டுகள் கட்டி முடிக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு வரும்போது மாண்புமிகு உறுப்பினர் கோருகின்ற அந்தப் பகுதியில் பேருந்துகள் இயக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

132—

புதிய கட்டடம்

***6593—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மொத்தம் 37 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. கோடி கோடியாய் கொள்ளையடித்த, குடும்ப ஆட்சி நடத்திய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், அவர்கள் ஐந்து முறை ஆட்சியில் இருந்தாலுங்கூட, அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டியதோ திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு மட்டும்தான் ஆனால், காரி தந்த பொன்னியின் செல்வி சொந்தக் கட்டடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் முதல்முறையாக தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்ற 1991–1996 ஆம் ஆண்டில் கடலூர், தஞ்சாவூர், தூத்துக்குடி, மதுரை மற்றும் கோவை ஆகிய ஐந்து மாவட்டங்களில் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்று பொற்கால ஆட்சி நடத்தி வந்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் 2011–2012 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது, தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் 10 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து, நாகப்பட்டினம், நாகர்கோவில், புதுக்கோட்டை, விருதுநகர், ஈரோடு, அரியலூர், வேலூர், திருவண்ணாமலை, கரூர் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட தலா ரூ. 1.5 கோடி வீதம் ரூ. 15.00 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கூறிய அறிவிப்பினைத் தொடர்ந்து விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் கட்டுவதற்காக விருதுநகர் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் 10 ஆயிரம் சதுர அடி பரப்பளவு நிலம் ஒதுக்கீடு பெறப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 2]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, 2012–2013 ஆம் ஆண்டில் சேலம், திருச்சி, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் பெரம்பலூர் ஆகிய 5 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கும் தலா 1.50 கோடி ரூபாய் வீதம் கொடுத்து மொத்தம் 7.50 கோடி ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக, 37 வேலைவாய்ப்பு அலுவலகங்களில், 20 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலில் சிறந்து விளங்கும் விருதுநகர் மாவட்டத்திலுள்ள அரசு வேலைவாய்ப்பு அலுவலகம், விருதுநகரில் மிகவும் நெருக்கடியான இடத்தில் 2,300 சதுர அடியில், எந்த நேரத்திலும் இடிந்துவிழக்கூடிய கட்டடத்தில், 18 அலுவலர்களுடன் இயங்கி வருகிறது. 2.16 இலட்சம் இளைஞர்கள் பதிவு செய்திருக்கும் இந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், சொந்த இடத்திற்கு, சூலக்கரை அரசு ஐ.டி.ஐ. வளாகத்திற்கு மாற்ற ரூ. 1.5 கோடி இந்த அரசின் முதல் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டது. இந்தத் திட்டம் மிகவும் தாமதமாக நடந்து வருகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை வேகப்படுத்தி, அந்தக் கட்டடப் பணிகளை விரைவில் நிறைவு செய்து, அதைத் திறந்து வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி.

[2013 ஏப்ரல் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் 20 இடங்களில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், விருதுநகரைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதியிலே இருக்கும் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கப்பட்டு, முதல் தளம் கட்டி முடிக்கப்பட்டு, இரண்டாவது தளம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மிகவும் துரிதமாகப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்; தர்மத் தாயினுடைய ஆட்சியில். ஆகவே, உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, கூடிய விரைவில், சீக்கிரமாக அந்த இடத்திலே வேலைவாய்ப்பு அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திறக்கப்பட்டு சிறப்பாக இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு* hard infrastructure *கட்டி முடிக்கப்பட்டுவிட்டாலும்,* District Employment Officer *அதிகாரத்தில் அனுமதிக்கப்படும் திறன் வளர்த்தல்* (Our Skill Development) reimbursement, *மாதத்திற்கு ரூ. 5,000/– மட்டுமே தரப்படுகிறது. வேலைவாய்ப்பு அலுவலகத்தில், போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ள தங்களைத் தயார்படுத்திக்கொள்ளும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இது உதவும் வழியில், ஓர் உண்மையான* preparation centre–*ஆக மாற வழிவகுக்கும் வகையில், அந்த உதவித் தொகையை மாதத்திற்கு ரூ. 50,000/– ஆக அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கும் உயர்த்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2013 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியைப் பொறுத்தவரையில், இன்றைக்கு அனைத்துத் தரப்பினருக்கும் ஒரு பொற்கால ஆட்சியாக சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கின்றது. உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்தக் கருத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

133—

குடமுழுக்கு

***7276—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி மந்தவெளியில் உள்ள ஸ்ரீதிரௌபதியம்மன் திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி நகர், மந்தவெளியில் அமைந்துள்ள அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிருவாகம் பரம்பரை அறங்காவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்குக்